பக்கங்கள்: 10

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 19 புதன்கிழமை 04.09.2024 கதிர் 301

## இது ரகசியம் அல்ல!

அரசியல்வாதிகள் மக்களைப் படுமுட்டாள்கள் என்று நினைத்துக் கொண்டு எப்படியெல்லாம் வெட்கமின்றி நடக்கிறார்கள் என்பகற்கு நேற்றைய நாடாளுமன்ற ☞ 2

## நல்லடக்கம், தகனம் செய்யும் உரிமை சட்டத்துக்கு அனுமதி

நல்லடக்கம் செய்தல், தகனஞ் செய்தல் உரிமைச்சட்டத்துக்குஅமைச்சரவைஅனுமதி அளித்துள்ளது.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் உடகவியலாளர்சந்திப்பின்போதேஅமைச்சர் கலாநிதிபந்துலகுணவர்த்தனமேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது: உயிரிழந்தபின்னர்,ஒவ்வொருநபர்களின் உடலங்களையும் அகற்றுகின்ற விதம் தொடர்பாகத் தீர்மானிக்கின்ற உரிமையை குறித்த நபருக்கே வழங்குவதற்காகவும், தனது உடலத்தை அகற்ற வேண்டிய விதம் பற்றிய விருப்பத்தைத் தெரிவிக்காதவர்கள் உயிரிழக்கின்றபோது, உயிரிழந்தவரின் அபிலாசைகள் மற்றும் மத ரீதியான, கலாசார அல்லதுதனிப்பட்டநம்பிக்கைகளைக்கருத்தில் கொண்டு உயிரிழந்தவரின் உடலத்தை நல்லடக்கம் செய்ய வேண்டுமா அல்லது தகனஞ் செய்ய வேண்டுமா என்பதைத் தீர்மானிக்கின்ற உரிமையை அந்நபரின் நெருங்கிய உறவினருக்கு ஒப்படைக்கின்ற வகையில் ஏற்பாடுகளை வகுப்பதற்காக சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ☞ 8

### ஒற்றையாட்சி நீக்க உத்தரவாதம் தரப்படாததால்

## தேர்தலைப் புறக்கணிப்பதே முன்னணியின் ஒரே முடிவு

ஒற்றையாட்சிநீக்கப்படும் என எந்தவொரு பிரதான வேட்பாளரும்உத்தரவாதம் அளிக்காததன் காரணமாக எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை தமிழ் மக்கள் புறக்கணிக்கவேண்டும் என்பதே தமது நிலைப்பாடு என தமிழ் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்கள் ஐரோப்பியஒன்றியத்தேர்தல் கண்காணிப்பாளர்களிடம் எடுத்துரைத்துள்ளனர்.

நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதித் தேர்தல் செப்டெம்பர் 21 நடைபெறவுள்ள நிலையில், தேர்தல்கள் ஆணைக்குழுவின் அழைப்பின்கீழ் தேர்தல் கண்காணிப்புப்பணிகளை முன்னெடுப்பதற்காக ஐரோப்பியஒன்றியத்தேர்தல் கண்காணிப்பாளர்கள் அடங்கியஇரண்டுகுழுக்கள் ஏற்கனவே நாட்டுக்கு வருகைதந்துள்ளன.

அதற்கமைய கடந்த வாரம் நாட்டை வந்தடைந்த26நீண்டகாலக் கண்காணிப்பாளர்கள் ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தேர்தல் கண்காணிப்புக்குழுவின் தலைமைக் கண் காணிப்பாளர் நச்சோ சன்செஸ் ஆமரால் நாட்டின் 9 மாகாணங்களுக்கும் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காகப் பிரித்து அனுப்பி வைக்கப்பட்டனர்.

அவர்களில் திருகோண மலை ☞ 8

## தபால் மூல வாக்களிப்பு இன்று தொடங்குகிறது

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு இன்று ஆரம்பமாகி செப்டெம்பர் 5 மற்றும் 6 ஆம் திகதிகளில் இடம்பெறும் என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

செப்டம்பர் 4 ஆம் திகதி மாவட்ட செயலகங்கள், தேர்தல் அலுவலகங்கள் மற்றும் பாதுகாப்புப் பிரிவினருக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், தபால் மூல வாக்களிப்பு இடம்பெறும் தினங்களில் வாக்களிக்கமுடியாதவர்களுக்குசெப்டம்பர் 11 மற்றும் 12 ஆம் திகதிகளில் மேலதிக நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் ஆணைக்குழு குறிப்பிட;டுள்ளது.

இம்முறை கொழும்பு மாவட்டத்தில் 27195, கம்பஹா மாவட்டத்தில் 52486, களுத்துறை மாவட்டத்தில் 37361, காலி மாவட்டத்தில் 41436, மாத்தறை மாவட்டத்தில் 30882 மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் 22167 தபால் மூல வாக்கு விண்ணப்பங்கள் பதிவாகியுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதன்படி, இம்முறைசமர்ப்பிக்கப்பட்ட ஏற்றுக்கொள்ளக்கூடியதபால்வாக்குகளின் மொத்த எண்ணிக்கை 712319 ஆகும். தகுதியுள்ள வாக்காளர்கள் அனைவரும் தபால் வாக்களிப்பில் கலந்து கொண்டு வாக்களிக்குமாறு தேர்தல் ஆணைக்குழு கேட்டுக் கொண்டுள்ளது.

### உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு

# மீண்டும் வேட்பு மனுக் கோர வசதியாக தனி சட்ட திருத்தம்

### அமைச்சரவை அனுமதி வழங்கியது

உள்ளூராட்சி அதிகாரசபை தேர்தல் (திருத்தச்) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2024ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பை அடிப்படையாகக் கொண்டு உள்ளூராட்சி அதிகாரசபைத் தேர்தலை நடத்துவதற்காக மீண்டும் நியமனப் பத்திரங்களை தாக்கல் செய்வதற்கும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் உடகவியலாளர் சந்திப்பின்போதே அமைச்சர் கலாநிதிபந்துலகுணவர்த்தனமேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

2023 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க உள்ளூராட்சி அதிகாரசபை தேர்தல் (திருத்தச்) சட்டத்தின்ஏற்பாடுகளுக்கமையவேட்பாளராகப் போட்டியிடும் போது இளைஞர்களுக்கான இடஒதுக்கீடு இழக்கப்படுகின்றமையால், அநீதிகளுக்குள்ளாகிய இளைஞர்களின் உரிமையைப் பாதுகாப்பதற்கும்,

2023ஆம்ஆண்டில்சமரப்பிக்கப்பட்டுள்ள நியமனப் பத்திரங்களை மீளப் ☞ 2

## மாகாண தேர்தல் சட்டத்தை நிறைவேற்ற முதலில் எதிர்பாளர்களைச் சமாளியுங்கள்

### சபை முதல்வர் சுமந்திரனுக்குப் பதில்

மாகாண சபைத் தேர்தல் தொடர்பான திருத்தச்சட்டமூலத்தைநிறைவேற்றுவதற்கு முதலில் எதிர்பாளர்களைச் சமாளியுங்கள் என்று சபை முதல்வர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தின் நேற்றைய அமர்வில்இலங்கை தமிழ்அரசுக்கட்சியின் உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் தனிநபர் பிரேரணை இன்று 3ஆம் வாசிப்புக்காக நாடாளுமன்றத்தில் எடுக்கப்படாமல் புறக்கணிக்கப்பட்ட நிலையில் எழுந்த சர்ச்சையின்போதேஅவர்இதனைத் தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்பான சுமந்திரனின் தனிநபர் பிரேரணை நேற்று நாடாளுமன்றத்தில் 3ஆம் வாசிப்புக்கு எடுக்கப்பட்டு நிறைவேற்றப்பட இருந்தது. அதற்கானஇணக்கங்கள் ஏற்கனவே காணப்பட்டிருந்த நிலையில் நாடாளுமன்றஒழுங்குப் பத்திர நிகழ்ச்சி நிரலில் இருந்துகடைசிநேரத்தில் அது தவிர்க்கப்பட்டது.

ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் கூட்டணியின் வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பது என்று தமிழ் ☞ 2

## அரச ஊழியர்களுக்கு 25% சம்பள அதிகரிப்பு

### சஜித் நேற்று வவுனியாவிலும் தெரிவிப்பு

அரசஊழியர்களுக்கு 25 சதவீத சம்பள அதிகரிப்பு. அவர்களின் குறைந்தபட்ச சம்பளம் 57 ஆயிரத்து 500 ரூபாயாக உயர்த்தப்படும். வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு 25 ஆயிரமாக்கப்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச நேற்று மீண்டும் உறுதியளித்தார்.

ஐக்கிய மக்கள் கூட்டணியின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் வவுனியா வைரவபுளியங்குளத்தில் அமைந்துள்ள யங் ஸ்டார் மைதானத்தில் நேற்று இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தபோதேஅவர்இதனைத்தெரிவித்தார். ☞ 2



## சர்வதேச நாணய நிதியம் மாத்திரமே பொருளாதார நெருக்கடிக்கு தீர்வல்ல

### அத்துரலிய ரத்ன தேரர் சுட்டிக்காட்டு

பொருளாதாரநெருக்கடிக்கு நாணய நிதியம் மாத்திரம் இறுதித் தீர்வல்ல என்று நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகசெயற்படும்உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில்நேற்று இடம்பெற்ற அமர்வின் போது விசேடகூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் அவர் இதனைத்தெரிவித்தார். ☞ 2

### கறுப்புப் பட்டியலில் உள்ள 41

## இராணுவ அதிகாரிகளை விசாரிக்க ஆளும்தரப்புக்கு ஆணை இல்லை

### உண்மை அறியும் ஆணைக்குழு குறித்து விமல் தரப்பு சீற்றம்

கறுப்பு பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள 41 இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக விசாரணைகளை மேற்கொள்ளும் ☞ 2

## 2 ஆயிரம் முறைப்பாடுகள்




ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் இதுவரை (ஜூலை மாதம் 31 ஆம் திகதி முதல் செப்டெம்பர் மாதம் 02 ஆம் திகதி வரை) 2,098 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் தேசிய தேர்தல் முறைப்பாட்டுமுகாமைத்துவநிலையத்திற்கு 754 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 1,266 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதேவேளை, மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 14 முறைப்பாடுகளும் ஏனைய விடயங்கள் தொடர்பில் 64 முறைப்பாடுகளும்கிடைக்கப்பெற்றுள்ளன.

## இனி இது .....

அமர்வு ஒரு மிகச் சிறந்த உதாரணம். மாகாணசபைகள்தேர்தல்திருத்தச்சட்டமூலம் (தனிநபர்) நேற்று நிறைவேற்றப்படுவதாக இருந்தது. இதற்கான இணக்கம் ஏற்கனவே காணப்பட்டிருந்தது. இந்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் 2ஆம் வாசிப்புக்கு விடப்பட்டுநிறைவேற்றப்பட்டிருந்தது. அதனை நேற்றைய தினம் 3ஆம் வாசிப்புக்கு எடுத்து ஏகமனதாக நிறைவேற்றுவது என்பதே திட்டமாக இருந்தது. யாராவது வாக்கெடுப்புக் கோரினால் அன்று இந்தச் சட்டமூலம் ஒருசில நிமிடங்களில் நிறைவேறும் நிலையில் இருந்தது. ஆனால் கடைசி நேரத்தில் அது நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலில் இருந்து காணாமற்போய்விட்டது.

இதற்கு விளக்கம் சொன்ன, தற்போதைய ஆளும் தரப்பின் ரணிலின் வலதுகையான கல்வி அமைச்சரும் சபை முதல்வருமான சுசில் பிரேமஜயந்த, இந்தச்சட்டத்திருத்தத்தை எதிர்ப்பவர்களும் இருக்கக்கூடும் என்று விமல் வீரவன்ஸவையும் அவரது கட்சியைச் சேர்ந்த மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினரான கெவிந்து குமாரதுங்க ஆகியோரின் கருத்துக்களையும் கேட்கவேண்டும் என்றார். இந்தச் சட்டத் திருத்தம் 2ஆம் வாசிப்புக்காக நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டபோதும் இந்த இருவரும் எதிர்த்தார்கள். அப்போது சபை முதல்வருக்கு அதுகண்ணுக்குத்தெரியவில்லை. அவர்களின் கருத்துக்களைச் செவிமடுக்காமலேயே, பொருட்படுத்தாமலேயே சட்டமூலம் 2ஆம் வாசிப்பில் நிறைவேற்றப்பட்டது என்று அறிவித்துவிட்டார்கள். ஏனென்றால் அப்போது தமிழர்களின் வாக்குகளைப் பெறுவதற்காக இந்தச் சட்டமூலத்தை நிறைவேற்றுவதான ஒரு பாவனையை அவர்கள் நடிக்கவேண்டியிருந்தது. தமிழ் அரசுக் கட்சி சஜித்தை ஆதரித்ததும் இனித் தங்களுக்குத் தமிழர் வாக்குகள் கிடைக்காது என்று நம்பிக்கொண்டு, பழிவாங்கும் வகையில் இந்தச் சட்டமூலத்தை நிறுத்த அவர்கள் தீர்மானித்தபோது விமல் மற்றும் கெவிந்துவின் குரல்கள் சபை முதல்வருக்கு உரத்துக் கேட்கின்றன. மக்களைமுட்டாள்களாகநினைத்துக்கொண்டு இவர்கள் நாடாளுமன்றத்தில் ஆடும் கூத்து சகிக்கவில்லை.

இந்தச் சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கான முயற்சிகள் தொடங்கப்பட்ட காலத்திலிருந்து சம்பந்தப்பட்டவர்களுடன் பேசும்போதெல்லாம் இது நிறைவேறிவிடுமா என்றுசந்தேகம்கிளப்புவதைநான்வழக்கமாகக் கொண்டிருந்தேன். ஒவ்வொருமுறையும் இந்தச் சந்தேகத்தைக் கிளப்புவதற்கு முன்னதாக ஜனாதிபதி இன்று என்ன சொல்கிறார், அவருடைய நிலைப்பாட்டில் மாற்றம் இல்லையா என்பது எனது தவறாத கேள்வியாக இருக்கும். ஏனெனில் ரணில் விக்கிரமசிங்க ஒருபோதும் நம்பிக்கைக்குரிய நபராக இருந்ததில்லை, அவரின் ஒவ்வொரு நகர்வும் கருத்தும் அரசியல் காய் நகர்த்தல்கள் மட்டுமே.

மாகாண சபைத் தேர்தலை நடத்தும் உன்னத நோக்கத்தோடு ரணில் இந்தத் திருத்தச் சட்டமூலத்தை நிறைவேற்ற இணங்கவில்லை என்பது முன்னரே தெளிவாகத் தெரிந்திருந்தது. ஜனாதிபதித் தேர்தலில் இதனை வைத்து தனக்கு என்ன ஆதாயத்தைத் தேடிக்கொள்ளலாம் என்பதுதான் அவரது நோக்கமாக, ஒரே குறிக்கோளாக இருந்தது என்பது தெளிவானது. அதனைப் பயன்படுத்தித்தான் சுமந்திரனும் இந்தச் சட்டமூலத்தை எப்படியாவது ஒப்பேற்றிவிடவேண்டும் என்று பார்த்தார். இந்தச்சட்டத்திருத்தத்தை நிறைவேற்றுவதன் மூலம் தன் மீது தமிழர்கள் நம்பிக்கை கொள்வதற்கான வாய்ப்பு உருவாகும் என்பதை நம்பித்தான் ரணில் இந்தக் காரியத்தில் களமிறங்கினார். ஆனால் தமிழ் அரசுக்கட்சி இடையில் சஜித் பிரேமதாசவுக்கே தமது ஆதரவு என்று அறிவித்ததும் அவருக்கு அந்த நம்பிக்கை போய்விட்டது.

தமிழர்களின் பிரதிநிதியாக சுமந்திரனை மட்டுமேஜனாதிபதிஎண்ணிக்கொண்டிருக்கிறார் போலும், தமிழ் அரசுக் கட்சி சொன்னால் தமிழர்கள் அனைவரும் தனக்கு எதிராக சஜித்துக்கே வாக்குகளைப் போடுவார்கள் என்றும் எண்ணிக்கொண்டார் போலும்! இல்லையேல், தான் தனது விம்பத்தை தமிழர்களிடம் உயர்த்திக்கொள்வதற்காக, அவர்களது நம்பிக்கையை வெல்வதற்காகத் தொடங்கிய முயற்சியை சுமந்திரனைப் பழிவாங்குவதாக நினைத்துக்கொண்டு நிறுத்தவேண்டும்ரணிலுக்கு எல்லாமே அரசியல் கணக்கு மட்டும்தான். அவர் ஒருபோதும் நம்பத்தகுந்த மனிதர் அல்லர். இதனால்தான், சமாதானத்துக்கான காலத்தில் அவரது முயற்சிகள் அனைத்தையும் விடுதலைப் புலிகள் சந்தேகக் கண்கொண்டே பார்த்தனர். அந்த நகர்வுகளுக்கு எதிர் நகர்வுகளையோஅல்லதுரணில்நகர்வுகளைத் தடுத்து நிறுத்தும் முயற்சிகளையோ அவர்கள் மேற்கொண்டார்கள். ரணில் எந்தக் காலத்திலும் நம்ப முடியாத ஒரு தலைவர். தமிழ் மக்களுக்கு மட்டும் அல்ல சிங்கள மக்களுக்குமே அவர் நம்பத்தகுந்த தலைவர் அல்லர். அதனால்தான் அவர்கள் ஒருபோதும் அவரை அதிகாரத்தில் தூக்கி இருத்தியதில்லைப் போலும்!

தமிழ் அரசுக் கட்சி சஜித் பிரேமதாசவை ஆதரிக்கும் முடிவை செப். 3ஆம் திகதிக்குப் பின்னர் எடுத்திருந்தால் மாகாண சபைகள் சட்டத் திருத்தத்தை ஒருவழியாக நிறைவேற்றியிருக்கலாம் என்கிற வாதம் முன்வைக்கப்படுகின்றது. அது சரியானதல்ல. ரணில் போன்ற ஒரு கீழ்த்தரமான தலைவரை மக்கள் முன் தோலுரித்துக்காட்ட தமிழ் அரசுக் கட்சியின் முடிவு முற்றிலும் துணை நின்றிருக்கின்றது. இன்று தபால் மூல வாக்களிப்புத் தொடங்க இருக்கும் நிலையில் ரணில் யார் என்பதை ஒவ்வொரு அரச ஊழியர்களும் மிகச் சரியாகப் புரிந்துகொள்வதற்கும் யாரைத் தாம் ஆதரிக்க வேண்டும் என்பதைச் சரியாத் தீர்மானிப்பதற்கும் அது உதவியிருக்கின்றது. இல்லையேல் ரணிலின் மாய்மாலத்தை நம்பி அவருக்கு வாக்களிக்கப் பலர் முன்வந்திருக்கக்கூடும். இப்போது ரணில் அம்பலப்பட்டு நிற்கின்றார். எந்த வாக்குகளுக்காக அவர் மாகாண சபைத் தேர்தல் சட்டத்திருத்தத்தை நிறைவேற்றுவதாக நாடகமாடினாரோ அதில் அம்பலப்பட்டு நிற்கின்றார். இது மிகவும் அவசியமானது.

யாருக்கும் உண்மையில்லாத சந்தர்ப்பவாதியான ஒருவர் நாட்டை ஆள்வதற்கும், அரசாட்சி செலுத்துவதற்கும் தகுதியற்றவர்

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## மீண்டும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெறுவதற்கும், பின்னர் 2024 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பை அடிப்படையாகக் கொண்டு உள்ளூராட்சி அதிகாரபைத் தேர்தலை நடாத்துவதற்காக மீண்டும் நியமனப் பத்திரங்களை தாக்கல் செய்வதற்கும் தேர்தல் ஆணைக்குழுவுக்குத் தேவையான அதிகாரம் கிடைக்கின்ற வகையில், குறித்த ஆணைக்குழுவுடன் ஆலோசித்து, பொருத்தமான ஏற்பாடுகள் உள்ளடங்கிய உள்ளூராட்சி அதிகாரசபைத் தேர்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலத்தைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்குஆலோசனைவழங்குவதற்கு பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சராக பிரதமர் மற்றும் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்றார்.

## மாகாண....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசுக் கட்சி முடிவெடுத்ததைத் தொடர்ந்து இவ்வாறு இந்தச் சட்டத் திருத்தத்தை நிறைவேற்றுவதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தவிர்த்துவிட்டார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் குற்றஞ்சாட்டினார்.

இதனை தொடர்ந்து எழுந்த சர்ச்சையின்போது சுமந்திரனிக் கருத்துக்களுக்குப் பதிலளித்த சபை முதல்வர் தெரிவித்ததாவது:

நல்லாட்சி காலத்தில் மேற்கொள்ளப்பட்ட மாகாண சபைகள் தேர்தல் சட்டத் திருத்த யோசனை காரணமாகவே தற்போது அந்தத் தேர்தலை நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தேர்தலை நடத்துவதில் உள்ள சட்ட சிக்கல்களை தீர்த்துக்கொண்டு தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கக்கூடிய வகையிலேயே தனி நபர் பிரேரணை கொண்டு வரப்பட்டுள்ளது. இதற்கு நாங்கள் இணங்குகின்றோம்.

இந்த தனிநபர் பிரேரணைக்கு எதிராக நாடாளுமன்ற உறுப்பினர்களில் எவராவது விவாதத்தை கோரினால் அந்த விவாதத்தை வழங்க வேண்டும். சிலர் இதற்கு எதிரான நிலைப்பாட்டில் இருக்கின்றனர். இவ்வாறான பிரச்சினைஇருப்பதனாலேயேஇந்தவிடயத்தில் எதிர்க்கட்சியினருடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்ளுமாறு கேட்கின்றோம். அவர்கள் எதிர்ப்பு இல்லை என்றால் எங்களுக்கும் பிரச்சினையில்லை.

ஜனாதிபதி தேர்தல் இடம்பெறவுள்ளது. அடுத்த நாடாளுமன்ற அமர்வு ஒக்டோபர் 8 நடக்கவுள்ளது. அப்போது வேண்டுமென்றால் இந்தச் சட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கலாம். இந்தவிடயத்தில் அனைவருக்கும் சம உரிமை வழங்க வேண்டும். சிலர் இதனை எதிர்க்கலாம்.

நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் கூற்றைக்கேட்கும்போதுதான் ஜனாதிபதியுடன் என்ன இணக்கப்பாட்டை ஏற்படுத்தினார் என்பது தெரிகின்றது. இவர் தமிழ் மக்களுக்கு விளங்கும் வகையில் தமிழ் மொழியில் கூறியதை போன்று கெவிந்து குமாரதுங்க மற்றும் விமல் வீரவன்ச ஆகியோர் கூறுவதை போன்று சிங்கள மக்களுக்கும் இது தொடர்பில் தெரிந்துகொள்ளும் உரிமை உள்ளது என்றார். அவர்களுக்கும் வாய்ப்பு வழங்கப்படவேண்டும் - என்றார்.

கெவிந்துகுமாரதுங்க, தான் இந்தத்திருத்தச் சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறார் என்று கூறினார். விமல் வீரவன்ஸ ஜனாதிபதித் தேர்தல் நடக்கும் சந்தர்ப்பத்தில் இவ்வாறான ஒரு யோசனை தேவையற்றது என்று தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரும் எதிர்க் கட்சியின் பிரதம கொரடாவுமான லக்ஸ்மன் கிரியெல்ல, இந்த விவாதத்தை இன்று (செப். 3) நடத்துவதற்கு ஏற்கனவே இணங்கியிருந்த காரணத்தால் அதனை உடனே நிறைவேற்றவேண்டும் என்று வலியுறுத்தினார்.

## அரச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச ஊழியர்கள் இந்த ஆளும்தரப்பில் புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள். எனது ஆட்சியில் அவர்களுக்கு 25 வீத சம்பள அதிகரிப்பு மேற்கொள்ளப்படும். தற்போது அவர்களுக்கு வழங்கப்படுகின்ற வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு 25 ஆயிரமாக அதிகரிக்கப்படும். குறைந்தபட்ச ஊதியமாக 57500 ரூபா மாற்றப்படும்.

அரச ஊழியர்கள் இந்த நாட்டின் சொத்து. அரச சேவையின் தரம் விருத்தி செய்யப்படவேண்டும். உங்களுடைய ஒத்துழைப்பை எங்களுக்குத் தாருங்கள். எதிர்வரும்ஜனவரிமாதத்திலிருந்துஉங்களின் சகல பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கான நடவடிக்கையினை நாம் எடுப்போம்.

அத்துடன் இந்த வவுனியா பிரதேசத்தில் வாழ்கின்ற கிராமபுற மக்களின் வாழ்வாதாரத்தினைஎனது அரசு மேம்படுத்தும். பல்துறைகளிலும்அபிவிருத்தியடைந்தஇடமாக இதனைமாற்றுவதற்கானநடவடிக்கையினை நிச்சயமாக எடுப்பேன்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அரசியல் சதி செய்து என்னைத் தோற்கடித்தார்கள். என்னால்முன்னெடுக்கப்பட்ட வீட்டுத்திட்டங்கள் அனைத்தும் கோட்டா ஆட்சியில் நிறுத்தப்பட்டன. எனவே எனது ஆட்சியில் அந்த வேலைத்திட்டங்களும் நிச்சயமாக முழுமைப்படுத்தப்படும்.

அத்தோடு நாட்டின் வறுமை நிலையினை குறைக்கவேண்டும். சேமிப்பு, முதலீடு, நுகர்வு, உற்பத்தி ஏற்றுமதி இவற்றினை மையப்படுத்தி வறுமை நிலையில் உள்ள ஒவ்வொரு குடும்பங்களிற்கும் தலா 20 ஆயிரம் ரூபாய் இரண்டு வருடங்களுக்கு வழங்கப்படும். இதன்மூலம் சுயபொருளாதாரத்தினை வளர்ச்சியடை செய்யவேண்டும். இந்த நிலையான வேலைத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவேன்.

கல்வித்துறை சுகாதாரத் துறை,விவசாயத்துறை ஆகியன எனது ஆட்சியில் மேம்படுத்தப்படும். மகாவலி எ வலயம் அபிவிருத்தி செய்யப்படும். விவசாயக்கடன்கள் அனைத்தும் நீக்கப்படும். புதிய உபகரணங்கள் விவசாயிகளிற்கு வழங்கப்பட்டு விவசாயத்தில் புதிய முறைமை ஒன்று உருவாக்கப்படும்.

வவுனியாவில் இளைஞர்களின் தொழில் வாய்ப்பினைக் கருத்தில்கொண்டு அத்தொழிற்சாலைகள் உருவாக்கப்பட்டு வேலைவாய்ப்பு பிரச்சினைகள் தீர்க்கப்படும். இந்த ஆட்சியினால் ஒரு கடவுச்சீட்டைக் கூட சீராகவழங்கமுடியாதிருக்கின்றது. இந்த நிலைமையில் அவர்களால் எவ்வாறு தொழிற்சாலைகளை வழங்கமுடியும்? தொழிற்சாலைகளை எரித்து அழித்தவர்கள் எவ்வாறு அதனை நிறுவித்தருவார்கள். எனவே நீங்கள் நன்றாகச் சிந்தியுங்கள்.

ஐக்கிய மக்கள் கூட்டணி சிறப்பான அணியினை கொண்டது, நாட்டை சிறப்பாக வழிநடத்தக்கூடிய சிறந்த அணி எம்மிடம் உள்ளது.போர் நிறைவுற்ற பின்னர் சர்வதேச ஒத்துழைப்பு மாநாடு ஒன்றை இந்த ஆட்சியாளர்களால் நடாத்தமுடியாமல் உள்ளது.

இதுபற்றி அவர்கள் சிந்தித்தார்களா. எதிர்காலத்தில் வடகிழக்கு மாகாணங்களை அடிப்படையாகவைத்துசர்வதேசகொடையாளர் மாநாடுஒன்றைநடாத்திஇந்தமாகாணங்களை அபிவிருத்தி. செய்ய முயற்சிகளை எடுப்பேன். எனவே எதிர்வரும் காலத்தில் அபிவிருத்தி புரட்சியோடு நாம் உங்களைச் சந்திப்போம் என்றார்.

## சர்வதேச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பிரதான ஜனாதிபதி வேட்பாளர்கள் தமது தேர்தல்அறிக்கையில்சர்வதேசநாணயநிதியம் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்கள். சர்வதேசநாணய நிதியத்தின் ஒத்துழைப்பால் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணப்பட்டுள்ளதாக ஆளும் தரப்பினர் குறிப்பிடுகிறார்கள்.

சர்வதேசநாணயநிதியத்தின் கட்டளைக்கு அமைய மத்திய வங்கியின் சட்டம் இயற்றப் பட்டுள்ளது. இந்த சட்டத்தில் பெரும்பாலான உறுப்புரைகள் மக்கள் வாக்கெடுப்புக்குச் செல்லும் விடயங்களை உள்ளடக்கியுள்ளது என்பதை அனைவரும் அறிவார்கள் . இந்த சட்டம் எளிய பெரும்பான்மையுடன்தான் நிறைவேற்றப்பட்டது.

இலங்கை மக்களால் மத்திய வங்கி சட்டம் தயாரிக்கப்படவில்லை. மாறாக வெளிநாட்டு முகவர் ஒருவரினால்தான் சட்ட வரைபு தயாரிக்கப்பட்டுள்ளது. இவ்விடயத்தை நாடாளுமன்றம் அறிந்திருக்கவேண்டும். சர்வதேச நாணய நிதியத்தின் செயற்திட்ட நிகழ்ச்சி நிரலை மறுசீரமைக்க முடியாது என்று குறிப்பிடப்படுகிறது.

நாணய நிதியத்தின் செயற்திட்டத்தை மாற்றினால் சமூக கட்டமைப்பில் பெரும் நெருக்கடிகளும், பிரச்சினைகளும் தோற்றம் பெறும் என்று ஒரு தரப்பினர் தவறான நிலைப்பாட்டை குறிப்பிட்டுக் கொள்கிறார்கள். சர்வதேசநாணயநிதியத்தின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொண்டநாடுகளில் ஆளும்தரப்புக்கள் வீழ்ச்சியடைந்தன, எதிர்க்கட்சிகள் ஆட்சியைக் கைப்பற்றின.

பொருளாதார நெருக்கடிக்கு நாணய நிதியம் மாத்திரம் இறுதித் தீர்வல்ல, ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் எவ்வளவு அரசமுறைகடன்கள்பெற்றுக்கொள்ளப்பட்டன? எந்த கருத்திட்டத்துக்காக கடன் பெற்றுக் கொள்ளப்பட்டன?

மத்தியவங்கிசட்டம்நாட்டின்தேவைக்காக நிறைவேற்றப்பட்டதாஅல்லதுசர்வதேசநாணய நிதியத்தின்தேவைக்காகநிறைவேற்றப்பட்டதா,? இந்த சட்டத்தில் நாட்டுக்கு எதிரான விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதை ஆளும் தரப்பு அறிந்துள்ளதா?

சர்வதேச நாணய நிதியத்துடனான செயற்திட்டத்தை மாற்றியமைத்தால் நாடு மீண்டும் வீழ்ச்சியடையும் என்று மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தேர்தல் காலத்தில் குறிப்பிட்டுள்ளமை முற்றிலும் தவறானது ஆகவே முன்வைக்கப் பட்டுள்ள கேள்விகளுக்கு ஆளும் தரப்பு பதிலளிக்கவேண்டும் என்றார்.

## இராணுவ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வசதிகளைஏற்படுத்திக்கொடுக்கவே உண்மை மற்றும்நல்லிணக்கஆணைக்குழுசட்டமூலம் கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்த சட்டமூலத்தை கொண்டு வர 69 இலட்சமக்களாணையுடன்வந்தஇந்தஆளும் தரப்புக்குத் தார்மீக உரிமை கிடையாது என நாடாளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ச, கெவிந்து குமாரதுங்க ஆகியோர் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தினார்கள்.

கலக்கமடையவேண்டாம்நீதிமன்றத்தை நாடுங்கள், புதிய ஜனாதிபதியை தெரிவு செய்ததன் பின்னரே அடுத்தக்கட்ட நடவடிக் கைகள் முன்னெடுக்கப்படும் என சபை முதல்வர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அமர்வின்போது உண்மை, ஒற்றுமைமற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவை உருவாக்கும்சட்டமூலம்முதலாம்வாசிப்புக்காக சமர்ப்பிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து எழுந்துஉரையாற்றிய எதிரணியின் சுயாதீன உறுப்பினர் விமல் வீரவன்ச,

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 30/1 தீர்மானத்துக்கு அமைவாகவே உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சட்டமூலம் உருவாக்கப்பட்டுள்ளது. போரை முடிவுக்கு கொண்டு வந்த இராணுவ அதிகாரிகளில் 41 பேரின் பெயர் கறுப்பு பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.

69 இலட்ச மக்களாணையை

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir



# மத்திய வங்கியின் ஆளுநர் பொறுப்பற்று செயற்படுகிறார்

## லக்ஷ்மன் கிரியெல்ல குற்றச்சாட்டு

நாட்டின் நிதி நிலைமை மற்றும் நிதி கொள்கை தொடர்பில் நான்கு மாதங்களுக்கு ஒருமுறை மத்திய வங்கி நாடாளுமன்றத்துக்கு அறிவிக்கவில்லை. மத்திய வங்கியின் ஆளுநர் தனது பொறுப்பை நிறைவேற்றவில்லை. பொறுப்பற்ற வகையில் செயற்பட்டுள்ளார் என எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவானலக்ஷ்மன்கிரியெல்லகுற்றஞ்சாட்டினார்.

நாடாளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற அமர்வின் போது சபைக்கு அறிவிப்பை விடுத்த சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன –

2023 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 80 (2) ஆம் ஏற்பாடுகளுக்கு அமைய மத்திய வங்கியின் ஆளுநர், நிர்வாக சபை மற்றும் நிதி கொள்கை சபையின் உறுப்பினர்கள் மற்றும் மத்திய வங்கியின் சகல பிரதி ஆளுநர்கள், நான்கு மாதங்களுக்கு ஒருமுறை மத்திய வங்கியின் பணிகள் குறித்து நாடாளுமன்றத்துக்கு தெளிவுபடுத்த சட்டத்தால் பொறுப்பாக்கப்பட்டுள்ளார்கள்.

இதற்கமைய மத்திய வங்கியின் ஆளுநர், உட்பட உயர் அதிகாரிகள் நேற்று நாடாளுமன்றத்துக்கு வருகை தந்து மத்திய வங்கியின் பணிகள் குறித்து தெளிவுப்படுத்தவுள்ளார்கள். இந்த கூட்டத்தில் உறுப்பினர்கள் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன் என அறிவித்தார்.

இதன்போது எழுந்து உரையாற்றிய எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல –

நாட்டின் பொருளாதார நிலைமை தொடர்பில் மத்திய வங்கி ஆளுநர் கடந்த நான்கரை ஆண்டு காலமாக நாடாளுமன்றத்துக்கு வருகைதந்து தெளிவுப்படுத்தவில்லை. தற்போது குதிரை சென்றதன் பின்னர்லாயத்தைமூடியகதைபோல்காணப்படுகிறது.

2022 ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடியின் போது நாட்டின் பொருளாதார நிலைமை குறித்து தெளிவுபடுத்தும் பொறுப்பு மத்திய வங்கியின் ஆளுநருக்கு இருந்தது.

நாட்டின் நிதி நிலைமை பற்றி அவர் நாடாளுமன்றத்துக்கு அறிவிக்கவில்லை. நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தியதன் பின்னரே பல விடயங்கள் வெளிவந்தன.

மத்திய வங்கியின் ஆளுநர் தனது பொறுப்பில் இருந்து விலகியுள்ளார். நாட்டின் நிதி நிலைமை குறித்து நான்கு மாதங்களுக்கு ஒருமுறை அவர் நாடாளுமன்றத்துக்கு அறிவிக்கவில்லை. ஆகவே மத்திய வங்கியின் ஆளுநர் பொறுப்புடன் செயற்படவில்லை. - என்றார்.(05)

# தேர்தல் காலத்தில் மக்களை தவறாக வழிநடத்தவேண்டாம்

## மத்திய வங்கி ஆளுநர் மீது அத்துரலியே ரத்ன தேரர் பாய்ச்சல்

சர்வதேசநாணயநிதியத்துடனானசெயற்திட்டத்தை மாற்றியமைத்தால் நாடு மீண்டும் வீழ்ச்சியடையும் என்று மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தேர்தல் காலத்தில் குறிப்பிட்டுள்ளமை முற்றிலும் தவறானது. நாணய நிதியத்துடனானசெயற்திட்டத்தைமாற்றியமைத்தால் பாதிப்புஏற்படும்என்பதுமக்களைதவறாகவழிநடத்தும் ஒரு செயற்பாடாகும் என நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற அமர்வின் போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு –

பிரதான ஜனாதிபதி வேட்பாளர்கள் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில்சர்வதேசநாணயநிதியம்பற்றிகுறிப்பிட்டுள்ளார்கள். சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பால் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணப்பட்டுள்ளதாக ஆளும் தரப்பினர் குறிப்பிடுகிறார்கள்.

சர்வதேச நாணய நிதியத்தின் கட்டளைக்கு அமையமத்தியவங்கியின்சட்டம்இயற்றப்பட்டுள்ளது. இந்தச் சட்டத்தில் பெரும்பாலான உறுப்புரைகள் மக்கள் வாக்கெடுப்புக்கு செல்லும் விடயங்களை உள்ளடக்கியுள்ளது என்பதை அனைவரும் அறிவார்கள். இந்தசட்டம்எளியபெரும்பான்மையுடன் தான் நிறைவேற்றப்பட்டது.

இலங்கை பிரஜையால் மத்திய வங்கி சட்டம் தயாரிக்கப்படவில்லை. மாறாக வெளிநாட்டு முகவர் ஒருவரால் தான் சட்ட வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயத்தை நாடாளுமன்றம் அறிந்திருக்க வேண்டும். சர்வதேச நாணய நிதியத்தின் செயற்திட்ட நிகழ்ச்சி நிரலை மறுசீரமைக்க முடியாது என்று குறிப்பிடப்படுகிறது.

நாணயநிதியத்தின் செயற்திட்டத்தை மாற்றினால் சமூக கட்டமைப்பில் பாரிய நெருக்கடிகளும், பிரச்சினைகளும் தோற்றம் பெறும் என்று ஒரு தரப்பினர் தவறான நிலைப்பாட்டை குறிப்பிட்டுக் கொள்கிறார்கள். சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொண்ட நாடுகளில் அரசாங்கங்கள் வீழ்ச்சியடைந்தன, எதிர்க்கட்சிகள் அரசாங்கத்தைக் கைப்பற்றின.

பொருளாதார நெருக்கடிக்கு நாணய நிதியம் மாத்திரம் இறுதி தீர்வல்ல, ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் எவ்வளவு அரசமுறை கடன்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன, எந்த கருத்திட்டத்துக்காக கடன் பெற்றுக் கொள்ளப்பட்டன.

மத்திய வங்கி சட்டம் நாட்டின் தேவைக்காக நிறைவேற்றப்பட்டதா அல்லது சர்வதேச நாணய நிதியத்தின் தேவைக்காக நிறைவேற்றப்பட்டதா? இந்தச் சட்டத்தில் நாட்டுக்கு எதிரான விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதை அரசாங்கம் அறிந்துள்ளதா?

சர்வதேசநாணயநிதியத்துடனானசெயற்திட்டத்தை மாற்றியமைத்தால் நாடு மீண்டும் வீழ்ச்சியடையும் என்று மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தேர்தல் காலத்தில் குறிப்பிட்டுள்ளமை முற்றிலும் தவறா னது. ஆகவே முன்வைக் கப்பட்டுள்ள கேள்வி களுக்கு அரசாங்கம் பதிலளிக்க வேண்டும். - என்றார்.

(05)

# பாணந்துறையில் கரையொதுங்கிய 15 அடி நீளமுடைய திமிங்கிலம் சாவு



பாணந்துறை கற்கரையில் கரையொதுங்கிய 15 அடி நீளமுடைய திமிங்கிலமொன்று நேற்று (செவ்வாய்க் கிழமை) காலை உயிரிழந்துள்ளதாக பாணந்துறை பொலிஸ் உயிர்காப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

சுமார்2ஆயிரம்கிலோநிறையுடைய இந்தத்திமிங்கிலம்கரையொதுங்கியசில மணிநேரங்களில்உயிரிழந்துள்ளதாக பொலிஸ் உயிர்காப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இந்த திமிங்கிலத்தின் உடலில் பல காயங்கள் ஏற்பட்டுள்ளதாக பொலிஸ் உயிர்காப்புப் பிரிவினர் மேலும் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அத்திட்டிய வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

# தேயிலை ஏற்றிச் சென்ற லொறி ஆற்றில் விழுந்து கோர விபத்து



ஹற்றன், நுவரெலியா பிரதான வீதியின் கொட்டகலை டெவோன் பகுதியில் லொறி ஒன்று வீதியை விட்டுவிலகிடெவோன் ஆற்றில் விழுந்து விபத்துக்குள்ளானதாக திம்புள்ள பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

திங்கட்கிழமை மாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

தேயிலை ஏற்றிச்சென்ற லொறியே இவ்வாறு வீதியைவிட்டுவிலகிடெவோன்ஆற்றில்வீழ்ந்துள்ளது.

இந்தவிபத்தில்லொறியின்சாரதிசிறுகாயங்களுக்குள்ளாகியுள்ளதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை திம்புள்ள பத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# பொதுநலவாய உயர்மட்டப் பிரதிநிதிகள் மாநாட்டில் இலங்கை சார்பில் வெளிவிவகார செயலர் பங்கேற்பு



பிரிட்டனில்நடைபெறும்பொதுநலவாய உயர்மட்டப்பிரதிநிதிகள்மாநாட்டில்இலங்கை சார்பில் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன கலந்துகொள்ளவுள்ளார்.

2024ஆம்ஆண்டுக்கானபொதுநலவாய அரச தலைவர்கள் மாநாடு எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் ஆரம்பமாகவுள்ளது.

அம்மாநாட்டுக்கு முன்னதாக நடைபெறும் பொதுநலவாய உயர்மட்டப் பிரதிநிதிகள் மாநாடு இம்மாதம் 2 - 6 ஆம் திகதிவரை லண்டனின்மார்ல்போரோஹவுஸில் அமைந்துள்ள பொதுநலவாய அமைப்பின் தலைமையகத்தில் நடைபெறுகின்றது.

இம்மாநாட்டில் இலங்கை சார்பில் வெளிவிவகார செயலாளர் அருணி விஜேவர்தன தலைமையிலான வெளிவிவகார அமைச்சின் உயர்மட்டப் பிரதிநிதிகள் குழுவினர் கலந்துகொள்ளவுள்ளனர்.

அதேவேளைஇம்மாநாட்டின்பக்க நிகழ்வாக வெளிவிவகார செயலாளர் அருணி விஜேவர்தன பொதுநலவாய அமைப்பில் அங்கம்வகிக்கும் ஏனைய நாடுகளின் உயர்மட்டப் பிரதிநிதிகளுடனும் சந்திப்புக்களை நடத்தவுள்ளார். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இலங்கையின் சாபக்கேடு

அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இலங்கையின் சாபக்கேடு என்பதை மீண்டும் ஒருமுறை நிரூபித்திருக்கிறார். மாகாண சபைகள் சட்டத் திருத்த தனிநபர் பிரேரணையை 3ஆம் வாசிப்பில் நிறைவேற்றுவதை அவர் தடுத்து நிறுத்தியிருக்கிறார். நாடாளுமன்றத்தில் நேற்று இந்தத் தனிநபர் பிரேரணை நிறைவேற்றப்படுவதாக இருந்தது. கடைசி நேரத்தில் அது நிகழ்ச்சி நிரலில் இருந்து விலக்கப்பட்டுவிட்டது.

வரும் அரசுத் தலைவர் தேர்தலில் ஐக்கிய மக்கள் கூட்டணியின் வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பது தமிழ் அரசுக் கட்சி எடுத்த முடிவுக்காக ஒட்டுமொதத் தமிழ் மக்களையும் பழிவாங்கும் வகையில் இந்த முடிவை அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எடுத்திருக்கிறார் என்று குற்றஞ்சாட்டியிருக்கிறார் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன். ரணில் ஒரு இனவாதி என்றும் சாடியிருக்கிறார்.

சுமந்திரனால் தனிநபர் பிரேரணையாகச் சமர்ப்பிக்கப்பட்ட மாகாண சபைத் தேர்தல் திருத்தச் சட்டம் தொடர்பான இரண்டாவது வாசிப்பு நாடாளுமன்றில் விவாதம் மற்றும் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டது. இந்தச் திருத்தச் சட்டமூலம் நேற்றைய தினம் மூன்றாம் வாசிப்புக்காக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்படும் என சுமந்திரனுக்கு ஜனாதிபதி உறுதியளித்திருந்தார்.

ரணில் விக்கிரமசிங்க தலைமை அமைச்சராக (பிரதமராக) இருந்த நல்லாட்சி அரசின் காலத்தில் 2017 இல் – அப்போது நடைமுறையில் இருந்த மாகாண சபைத் தேர்தல் சட்டம் இல்லாதொழிக்கப்பட்டது. ஒரு வருடத்துக்குள் புதிய சட்டம் கொண்டுவரப்பட்டு, மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்படும் என அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்திருந்தார். ஆனால், அந்தச் சட்டம் கொண்டுவரப்படவில்லை. அதனால் கடந்த எட்டு வருடங்களாக மாகாண சபைகள் தேர்தல்கள் நடைபெறாமலேயே இழுபடுகின்றன. இதனால் பழைய மாகாண சபைத் தேர்தல் சட்டத்தை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வந்து மாகாண சபைத் தேர்தல்களை நடத்தலாம் என்று யோசனை முன்வைக்கப்பட்டது.

இதற்கமைய பழைய மாகாண சபைகள் சட்டத்தை மீள நடைமுறைக்குக்கொண்டு வர வழிவகுக்கும் மாகாணசபைத் தேர்தல் திருத்தச் சட்டம் தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனால் தனிநபர் பிரேரணையாகச் சமர்ப்பிக்கப்பட்டது.

அது தொடர்பான இரண்டாவது வாசிப்பு நாடாளுமன்றில் விவாதம் மற்றும் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்படும் நிலைமை வரை முன்னேறியது. அந்தத் திருத்தச் சட்டமூலம் இன்றைய தினம் மூன்றாம் வாசிப்புக்காக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு முழுமையாக நிறைவேற்றப்படும் என அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்திருந்தார்.

ஆனால், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி அரசுத் தலைவர் தேர்தலில் வேறு வேட்பாளர் ஒருவரை ஆதரிக்கத் தீர்மானம் எடுத்தமையால் இதனை இன்றைய நாடாளுமன்ற நிகழ்சி நிரலில் உள்வாங்காது ஜனாதிபதி தடுத்துள்ளார்.

இந்த விடயம் நாடாளுமன்றத்தின் ஒக்டோபர் இரண்டாம் வார நிகழ்ச்சி நிரலுக்கு பின்தள்ளப்பட்டது. தற்போதைய அரசுத் தலைவர்தேர்தல்முடிவுகளுடன்நாடாளும்ன்றம்கலைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதனால் இந்தச் சட்டமூலம் பெரும்பாலும் இத்தோடு செயலிழந்து போகும், நடைபெறாமல் இருக்கும் மாகாண சபைத் தேர்தல்களை நடத்தும் முயற்சி இப்போதைக்குச் சரிவராது என்று கருதப்படுகின்றது.

இதனால், "அரசுத் தலைவர் தமிழ் மக்கள் முன்பும் இலங்கை மக்கள் முன்பாகவும் இனவாதியாகக் காட்டப்படுவார். அவர் பல வாக்குறுதிகளைக் கொடுத்திருக்கிறார் ஒன்றையும் அவர் செய்யவில்லை, அவர் இப்படியாகக் கடைசி நேரத்தில் இதைத் தடுப்பதன் மூலமாக கடைசி எங்கள் மக்கள் மீது வெறுப்பைக் காட்டுகின்ற நிகழ்ச்சியாகத்தான் இதனைக் காண்கின்றோம்" என்றார் சுமந்திரன்.

தமிழர்கள் விடயத்தில் ரணில் விக்கிரமசிங்க வாக்குறுதிகள் வழங்குவதும் பின்னர் அதனை நிறைவேற்றாது விடுவதும் புதிதல்ல. அவரைப் பொறுத்தவரை இந்தத் திருத்தச் சட்டமூலம் அதில் மற்றொன்று மட்டுமே. அவர் இலங்கைக்குக் கிடைத்த ஒரு சாபக்கேடு. அவரை நம்பிக் காரியமாற்றப் போகும் தமிழ் அரசில்வாதிகளே இதனைப் புரிந்துகொண்டு செயற்படவேண்டும்

# வண்ணத்துப் பூச்சிகள் பறக்கும்போதும் இறகுகள் சூடேறாத அதிசயம்



இறகுகளில் கண்ணைக்கவரும் அழகுடன் ஒளிமிகுந்தபலநூறுவண்ணங்களுடன்குழந்தைகள் மட்டுமல்லாது பெரியவர்களின் மனங்களையும் கவரும் பட்டாம்பூச்சிகள் (வண்ணத்துப்பூச்சிகள்) இயற்கையின் பெருங்கொடை.

நாடு முழுவதும் ஏறத்தாழ 17,500 வகையான பட்டாம்பூச்சிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இவற்றின் இறகுகள் செதில்களால் மூடப்பட்டுள்ளன. பட்டாம்பூச்சிகள் பூப்பூக்கும் செடிகளுடன் நெருங்கிய உறவு கொண்டவை. பூக்களில் இருக்கும் பூந்தேனை உறிஞ்சி உயிர் வாழ்பவை. என்றாலும் சில பட்டாம்பூச்சிகள் செடிகளையும் தின்னும் வழக்கம் கொண்டவை. பறவைகள்போல, பல்லாயிரம் பட்டாம்பூச்சிகள் கூட்டமாக வலசைபோகும் பண்பு கொண்டவை.

பட்டாம்பூச்சியின் இறக்கையில் காணப்படும் வண்ணம் இரண்டு வகையானது. ஒன்று, வர்ணங்கள், சாயங்கள், மை ஆகியவற்றில் காணப்படுவது போன்று 'நிறமிகளால்' ஆனது. குறிப்பிட்ட வேதியல்கலவைகளால் நிறமிகள் உருவாகின்றன. இன்னொன்று, வானவில் போன்று கட்டமைப்பு சார்ந்தது. தடைகளைக் கண்டறிந்து, தவிர்த்துப் பறக்கும் அளவிற்கு அவற்றின் கண்கள் கூர்மையானவை.



பட்டாம்பூச்சிகள் விரைந்து பறக்கும்போது அவற்றின் இறக்கைகளை மிக வேகமாக அசைக்கின்றன. அப்படி அசைக்கும்போது அவை சூடேறவேண்டும் என்று சொல்கிறது இயற்பியல். இதற்கு மாறாகப் பகலில் பறக்கும் பட்டாம்பூச்சிகளின் இறகுகள் சூரிய வெப்பத்தினால் கூட சூடேறுவதில்லை என்றும், அது ஏன் என்றும் ஓர் ஆய்வுக்குழு கண்டறிந்துள்ளது. பொதுவாகவே பட்டாம்பூச்சிகளின் இறக்கைகள் குளிர்ந்திருப்பதற்கு அவற்றின் தனித்துவமான கட்டமைப்பே காரணம் என்று ஆய்வுக் குழுவினர் கண்டறிந்திருக்கின்றனர்.

பட்டாம்பூச்சிகளின் புதிய வெப்பப் பிம்பங்கள் அவற்றின் இறக்கைகளில் உயிருள்ள பகுதிகளான 'பூச்சிக்குருதியைக்' கடத்தும் நாளங்கள், இணைசேரும் காலத்தில் ஆண் பட்டாம்பூச்சிகள் வெளிப்படுத்தும் மணமுள்ள ஃபெரோமோன்களைக் கொண்டபைகள் வெப்பத்தை விரைந்து கடத்திவிடுகின்றன என்று கண்டுபிடித்துள்ளனர். இவற்றைச் சுற்றியிருக்கும் உயிரற்ற செதில்களை விடவும், உயிருள்ள பகுதிகளே வெப்பத்தை வெளியேற்றுவதில் முதன்மைப் பங்காற்றுகின்றன.

உடல்வெப்பநிலையில் ஏற்படும் சிறிய மாற்றம் கூட பட்டாம்பூச்சியின் பறத்தல் திறனைப் பெரிய அளவில் பாதித்துவிடும். காரணம், மார்புப்பகுதியில் உள்ள தசை ஓரளவிற்கு வெப்பமாக இருந்தால் மட்டுமே, தொடக்கத்தில் இறகுகளை விரைவாக அசைத்துப் பட்டாம்பூச்சி எழுந்து பறக்க முடியும். பட்டாம்பூச்சியின் இறகுகள் மிகவும் மெலிந்திருப்பதால், மார்புத்தசையை விட வெப்பம் அதிகமாக இருக்குமானால் தேவைக்கும் அதிகமாகச் சூடேறிவிடும்.

பட்டாம்பூச்சியின் இறகுகள் செதில்களால் நிறைந்திருப்பதால், மனிதர்களின் முடி, பறவைகளின் இறகுத்தூவிகள் போன்று உயிரற்றவை என்று பலரும் எண்ணக்கூடும். ஆனால், பறத்தலில் உயிர்ப்புடன் இருக்கவும், இறக்கைகளில் உருவாகும் வெப்பத்தை விரைந்து வெளியேற்றவும் பட்டாம்பூச்சியின் இறக்கைகள் உயிருள்ள திசுக்களையும் கொண்டிருக்கின்றன என்று கொலம்பியா பல்கலைக்கழகத்தின் பயன்பாடு இயற்பியல் துறையைச் சேர்ந்த 'நன்ஃபாங்க் யு' தெரிவிக்கிறார். வெப்பம் அதிகமாக இருக்குமானால், பறப்பதற்கு அது தடையாக இருக்கும்.

பட்டாம்பூச்சியின் இறக்கைகள் மிகவும் தடிமன் குறைந்தும், பகுதி ஒளி ஊடுருவலும் கொண்டிருப்பதால் அகச்சிவப்பு ஒளிப்பட கருவிகளால் இறகுகளிலிருந்து வெளியேறும் வெப்பத்தை, சூழல் வெப்பத்திலிருந்து தனியே பிரித்துப்பார்க்க முடியவில்லை. அதனால் யு தலைமையிலான ஆய்வுக் குழுவினர் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட அகச்சிவப்புத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி 50 பட்டாம்பூச்சிகளின் இறகுகளின் வெப்பத்தை அளந்து ஆய்வு செய்துள்ளனர்.

பட்டாம்பூச்சியின் இறக்கைகளில் உள்ள குழல் வடிவ மீநுண் - கட்டமைப்பு, உயிருள்ள திசுக்களிலிருந்து தேவைக்கு அதிகமாக இருக்கும் வெப்பத்தை வெளியேற்றுகிறது. இறக்கையின் குருதிக்குழல்கள் தடிமனான மென்பொருளால் போர்த்தப்பட்டுள்ளது. வாசனைப் பைகள் மீநுண் கட்டமைப்பையும், கூடுதல் மென்பொருளையும் கொண்டுள்ளன. தடிமனாகவும், குழல் வடிவிலும் இருக்கும் பொருள்கள், மெல்லியதாகவும், திடமாகவும் இருக்கும் பொருள்களை விடவும் கூடுதல் வெப்பத்தை விரைந்து வெளியேற்றும் பண்புக் கொண்டவை என்று கூறுவது கவனம் கொள்ளத்தக்கது.

கட்டமைப்புகள் பட்டாம்பூச்சியின் இறக்கைகளை ஒருகுறிப்பிட்ட எல்லைவரையிலுமே வெப்பத்திலிருந்து பாதுகாக்கின்றன. செறிவு மிகுந்த ஒளியின் கூடுதல் வெப்பத்தைத் தாங்கமுடியாத பட்டாம்பூச்சிகள் அவ்விடத்தைவிட்டு அகன்று சென்று விடுகின்றன, இறக்கைகளில் உள்ள செதில்கள் மீது லேசர் ஒளியைப் பாய்ச்சி வெப்பத்தை உண்டாக்கியபோது, அதனைப் பட்டாம்பூச்சிகள் உணரவில்லை. மாறாக, அவற்றின் குருதிக்குழல்கள் சூடாக்கப்பட்டபொழுது பட்டாம்பூச்சிகள் அவற்றின் இறக்கைகளை அசைக்கின்றன அல்லது அவ்விடத்தைவிட்டு அகன்று விடுகின்றன என்று ஆய்வாளர் கூறுகிறார்.

பட்டாம்பூச்சிகள் வெயிலில் பறக்கும்போது உண்டாகும் மிகை வெப்பம், இறக்கைகளில் உள்ள உயிருள்ள திசுக்களால் வெளியேற்றப்படுகின்றன. சில பட்டாம்பூச்சிகளின் இறக்கைகளில் இதயம் துடிப்பது போன்ற அமைப்பு இருப்பதையும் ஆய்வுக் குழுவினர் கண்டுபிடித்திருக்கின்றனர். இதயம் போன்ற அமைப்பு 'பூச்சிக்குருதியை' ஆண் பட்டாம்பூச்சியின் வாசனைப் பைகளின் ஊடாகச் செலுத்துகிறது. நிமிடத்திற்குச் சில தடவைகள் இறக்கைகளை அசைப்பதனால் பட்டாம்பூச்சிகள் இதனைச் சாத்தியப்படுத்துகின்றன.

தடையின்றி பறப்பதற்கு இறக்கைகளின் எடை மிகவும் குறைந்ததாக இருக்க வேண்டும். அப்படி எடை குறைந்த இறக்கைகளின் நடுவில் இதயம் போன்ற அமைப்பு அமைந்திருப்பது மிகவும் வியப்பேற்படுத்துவதாக ஆய்வுக் குழுவினர் தெரிவிக்கின்றனர். 'வாசனைப் பை' பாதுகாப்புடன் சிறப்பாகச் செயல்படுவதற்கும் இந்த இதய அமைப்புத் துணைசெய்கிறது என்பதிலிருந்து அதன் முக்கியத்துவம் புரிகிறது.

காலைக்கதிர் Kalaikkathir



# மனைவியுடன் இணைத்து வைக்குமாறுகோரி கணவன் மரத்தில் ஏறி விசித்திர போராட்டம்

**வவுனியா பொலிஸ் நிலையம் முன்பாக சம்பவம்**

பிரிந்து சென்ற தனது மனைவியை மீண்டும் தன்னுடன் இணைத்துத்தருமாறு கோரி நபர் ஒருவர் மரத்தில் ஏறி போராட்டம் மேற்கொண்டமையால் வவுனியா நகரில் பதற்றமான சூழல் ஏற்பட்டது.

குறித்த சம்பவம் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில் -

நேற்றையதினம் காலை வவுனியா தலைமையக பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக உள்ள மரத்தில் ஏறிய குடும்பஸ்தர் ஒருவர் கீழே இறங்காமல் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார்.

இது தொடர்பாக அவரிடம் விசாரித்த போது தனது மனைவி தன்னைவிட்டு பிரிந்துசென்றுள்ளார் எனவும் அவரை தன்னுடன் மீண்டும் இணைத்துவைக்குமாறும் தெரிவித்துள்ளார்.

நீண்டநேரமாக மரத்தில் இருந்து இறங்காமல் இருந்தமையால் குறித்த பகுதியில் பரபரப்பான சூழல் ஏற்பட்டது.

பின்னர்பொலிஸார்மற்றும்ஏனையதரப்பினரின்வேண்டுகோளுக்கு இணங்க போராட்டத்தில் ஈடுபட்ட நபர் மரத்தில் இருந்து கீழே இறங்கியமை குறிப்பிடத்தக்கது.

(05, 100)

# கரைச்சி பிரதேச சபை அலுவலர் இருவர் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் கைது

கொழும்பிலிருந்து வருகை தந்த இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினரால் கரைச்சி பிரதேச சபை வருமான உதவியாளர்கள் இருவர் நேற்று (செவ்வாய்க்கிழமை) கையும் மெய்யுமாக கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த வருமான வரி உத்தியோகத்தர்கள் இருவரும் இலஞ்சம் வாங்குவதாக ஆணைக் குழுவுக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்ட இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினர் குறித்த வருமான வரி உத்தியோகத்தர்கள் இருவரையும் கிளிநொச்சி உருத்திரபுரம் பகுதியில் வைத்து கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இரண்டு உத்தியோகத்தர்களும் ஆணைக்குழு அதிகாரிகளால் கொழும்புக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளனர்.

மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக கரைச்சி பிரதேச சபையின் செயலாளருடன் தொடர்பு கொண்ட போது கைது செய்யப்பட்டதை உறுதிப்படுத்திய அவர் மேலதிக தகவல் எதுவும் தனக்கு தெரியாது எனப் பதிலளித்தார்.(05)

# போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டவருக்கு ஆயுள் தண்டனை

ஹெரோயின் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டதாக கூறப்படும் நபரொருவருக்கு ஆயுள் தண்டனை விதித்து கொழும்புமேல்நீதிமன்றம்உத்தரவிட்டுள்ளது.

59வயதுடையநபரொருவருக்கேஇவ்வாறு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

ஆயுள்தண்டனைவிதிக்கப்பட்டவர்கடந்த 2021 ஆம் ஆண்டு கல்கிசை பட்டோவிட்ட பிரதேசத்தில் வைத்து ஹெரோயின் போதைப்பொருளுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இதனையடுத்து, சந்தேக நபருக்குஎதிராகநீதிமன்றத்தில்வழக்குதாக்கல் செய்யப்பட்டிருந்த நிலையில் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அமல் ரணராஜாவால் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.(05)

# கப்பல் மோதி படகு விபத்து ; மூன்று மீனவர்கள் மாயம்

கப்பல் ஒன்று உள்ளூர் மீன்பிடி இழுவை படகு மீது மோதி விபத்துக்குள்ளானதில் மூன்று மீனவர்கள் காணாமல் போயுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது –

கடந்த மாதம் 25 ஆம் திகதி 'நிஹதமணி 01' என்ற உள்ளூர் மீன்பிடி இழுவை படகில் 07 மீனவர்கள் காலி மீன்பிடி துறைமுகத்தில் இருந்து மீன் பிடிக்கச் சென்றுள்ளனர்.

இந்நிலையில், நேற்று (செவ்வாய்க்கிழமை ) காலை இழுவை படகை அவ்வழியாக சென்ற கப்பல் மோதி விபத்துக்குள்ளாக்கியுள்ளது.

இதன்போது, கவிழ்ந்த படகில் இருந்த மூன்று மீனவர்கள் காணாமல் போயுள்ளனர்.

மேலும் 04 மீனவர்கள் லசந்த 01 என்ற மீன்பிடி இழுவை படகால் மீட்கப்பட்டுள்ளனர். மீட்கப்பட்ட மீனவர்கள் கரைக்கு கொண்டு வரப்பட்டதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில், மீட்கப்பட்ட மீனவர்களில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேராவின் பணிப்புரையின் பேரில், 'லசந்த 01' என்ற மீன்பிடி இழுவை படகு மூலம் கொண்டு வரப்பட்ட மீனவர்களை மீட்பதற்காக கடற்படையினர் இலங்கை கடற்படையின் கஜபாகு கப்பலை அனுப்பி வைத்துள்ளனர்.

இதேவேளை, நிஹாதமணி 01 மீன்பிடி இழுவை படகு கவிழ்ந்ததற்கு காரணமான வெளிநாட்டுக் கப்பலை அடையாளம் கண்டு அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு கொழும்பு கடல்சார் தேடல் மற்றும் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்தின் உதவியுடன்வணிகக்கப்பல்செயலகம்முயற்சிகளை ஒருங்கிணைத்து வருவதாக கடற்படை மேலும் தெரிவித்துள்ளது.(05)





கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# பதுளை பொது வைத்தியசாலைக்கு முன் வைத்தியர்கள், தாதியர்கள் ஆர்ப்பாட்டம்





பதுளை பொது வைத்தியசாலை வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் பதுளை சிவில் அமைப்பினர்கள் இணைந்து பதுளை பொது வைத்தியசாலைக்கு முன்பாக பாரிய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அரச வைத்தியசாலைகளில் அத்தியாவசிய மருந்துகள் பிற மருத்துவ உபகரணங்கள் பற்றாக்குறை உள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் உதவி செயலாளர் வைத்தியர் பாலித ராஜபக்ஷ கடந்த காலங்களில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தார்.

அவருக்கு எதிராக சுகாதார அமைச்சு ஒழுக்காற்று நடவடிக்கைமேற்கொள்ளஎடுக்கப்பட்டதீர்மானத்துக்கு எதிராக குறித்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# விமான நிலைய அபிவிருத்தி தொடர்பில் கலந்துரையாடல்







யாழ்ப்பாணம் பலாலி சர்வதேச விமான நிலைய அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப் பாண மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் திங்கட்கிழமை மாவட்டச் செயலக அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ்ப்பாணம்பலாலிசர்வதேசவிமான நிலையஅபிவிருத்திக்கானநீர்வசதிகள், மின்சாரம்வசதிகள், காணிஅபிவிருத்தி மற்றும் சுற்றுலா அபிவிருத்தி போன்ற விடயங்கள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டன.

இந்தக்கலந்துரையாடலில்மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், உதவி மாவட்ட செயலாளர், தெல்லிப்பழை பிரதேச செயலாளர், விமானப் படை அதிகாரிகள், நிறுவன உதவி முகாமையாளர், பலாலி விமான நிலைய செயற்பாட்டு முகாமையாளர், நீர்வழங்கல்மற்றும்வடிகாலமைப்பின் உதவிப் பணிப்பாளர், தொழிற்துறைத் திணைக்களம், வீதி அபிவிருத்தி திணைக்களம் சந்தைப்படுத்தல் பிரிவு ஆகியவற்றின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.(05)

# வவுனியா போகஸ்வெள வீதியை மறித்து நேற்று ஆர்ப்பாட்டம்



வனஜீவராசிகள் காரியாலய அதிகாரிகளின் கவனயவீனம் காரணமாக காட்டு யானைகளின் தாக்குதலால் ஒரு வாரத்திற்குள் தமது கிராமத்தில் இருவர் உயிரிழந்தமையாலும், மனித உயிர்கள் பலியாகியுள்ளதாலும் வவுனியா மஹாகச்சகொடிய கிராம மக்கள் வவுனியாவில் இருந்து போகஸ்வெள வரையான பிரதான வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது கருத்து தெரிவித்த ஆர்ப்பாட்டக் காரர்கள் -

கடந்த வாரத்தில் காட்டு யானைகளின் தாக்குதலால் இருவர் உயிரிழந்துள்ளனர் எனவும், குறித்தயானைகளை கிராமத்தைவிட்டுவிரட்டுமாறு வவுனியா வனஜீவராசிகள் அலுவலக அதிகாரிகளுக்கு அறிவித்தும் வவுனியா வனஜீவராசிகள் அலுவலக அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் கிராம மக்கள் தெரிவித்தனர்.(05)

# சுன்னாகம் பொலிஸாரால் குடும்பஸ்தர் சித்திரவதை மனிதவுரிமை ஆணைக்குழு தீவிர விசாரணைகளில்

யாழ்ப்பாணம் - சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள வீடொன்றினுள் நள்ளிரவு வேளை அத்துமீறி நுழைந்த பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் குடும்பஸ்தரை எவ்வித காரணமும் கூறாது கைது செய்துள்ளனர் எனவும், கைது செய்த பின்னர் அவரை சித்திரவதைக்கு உட்படுத்தியதாகவும் பாதிக்கப்பட்டவரின் மனைவி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தபோதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் -

கடந்த 28ஆம் திகதி நள்ளிரவு வேளை எமது வீட்டின் மதில் ஏறி பாய்ந்து, வீட்டின் முன் பக்க கதவை கால்களால் உதைத்து உடைத்து வீட்டினுள் அத்துமீறி நுழைந்த சுன்னாகம் பொலிஸார் எனது கணவரை தாக்கிக் கைது செய்தனர்.

கணவரை எதற்காக கைது செய்கிறீர்கள் என கேட்டவேளை, அதற்கு அவர்கள் பதில் அளிக்கவில்லை. கணவரின் கைதை தடுக்க நிறைமாத கர்ப்பிணியான நானும் , கணவரின் அண்ணாவின் பெண் பிள்ளைகள் உள்ளிட்ட நாம் முயன்ற வேளை எம்மையும் தாக்க முற்பட்டனர்.

கணவரின் அண்ணாவின் மகள் கைத்தொலைபேசியை கையில் வைத்திருந்த வேளை , வீடியோ எடுக்கிறீயா என போனை பறித்து உடைக்க முயன்றனர்.

நாம் கணவரை பொலிஸார் காரணமின்றி கைது செய்து அழைத்து செல்வதைத் தடுக்க முயன்ற போதிலும் எம்மை தாக்குவது போன்று அச்சுறுத்தி , கணவனை வீட்டில் இருந்து இழுத்து சென்று , வெளியில் நின்ற ஓட்டோவில் ஏற்றி சென்றனர்.

கணவனை அழைத்து செல்லும் போதே . கண்களை கட்டியுள்ளனர். பின்னர் யாருடனோ தொலைபேசியில் தமிழ் பொலிஸ் உத்தியோகஸ்தர் , கணவனின் பெயரை கூறி , அவரை கைது செய்து விட்டோம் எனக் கூறியுள்ளார்.

நாம் நள்ளிரவே சுன்னாகம் பொலிஸ் நிலையம் சென்ற போது , கணவனை அடித்து துன்புறுத்தி இருந்தனர். அது தொடர்பில் கேட்ட போது , சந்தேகத்தில் கைது செய்துள்ளோம் எனக் கூறி எம்மை அங்கிருந்து அனுப்பி விட்டனர்.

மறுநாள் 29ஆம் திகதி நாம் யாழ் . மாவட்ட பொலிஸ் அத்தியட்சகரின் அலுவலகம் சென்று முறையிட்டோம். அவர் அது தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் தொலைபேசியில் விசாரித்தார். அவர்கள் ஏதோ கூற எம்மை அனுப்பி வைத்தார்.

நாங்கள் மீண்டும் சுன்னாகம் பொலிஸ் நிலையம் சென்ற வேளை , கணவரை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி , தமிழ் பொலிஸ் உத்தியோகஸ்தரான உப பொலிஸ் பரிசோதகர் உள்ளிட்டோர் பைப் , வயர்களால் மிகமோசமாக தாக்கி சித்தரவதை புரிந்துள்ளனர்.

கணவனை நிலத்தில் முழங்காலில் இருந்தி தாக்கியுள்ளனர். தாக்குதலுக்கு இலக்கானவர் சத்தி எடுத்துள்ளார்.

கணவரை கைது செய்த பொலிஸார் 24 மணி நேரம் கடந்தும் நீதிமன்றில் முற்படுத்தாது , சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மிக மோசமான முறையில் சித்திரவதைக்கு உள்ளாகியுள்ளனர்.

பின்னர் அவரை விடுவித்துள்ள நிலையில் நாம் அவரை தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்த்துள்ளோம். தற்போது எனது கணவர் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார் எனத் தெரிவித்தார்.

அதேவேளை குறித்த சம்பவம் தொடர்பில் இலங்கைமனிதவுரிமைஆணைக்குழுவின்பிராந்திய அலுவலகம் கவனம் செலுத்தியுள்ளது எனவும் , பாதிக்கப்பட்ட நபரை திங்கட்கிழமை தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் நேரில் பார்வையிட்டு , அவரது வாக்கு மூலங்களை பெற்றுள்ளதாகவும், அதன் அடிப்படையில் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக மனிதவுரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் த. கனகராஜ் தெரிவித்துள்ளார்.

(05)

# தலை முடி உதிர்ந்து விழும் அளவுக்கு கிரீம் பூசிய அழகுக் கலை நிலையம்

## உரிமையாளரைக் கைது செய்ய நீதிமன்றம் உத்தரவு

தனது தலை முடியை அழகுபடுத்துவதற்காக மினுவாங்கொடை நகரத்தில் உள்ள அழகுகலை நிலையம் ஒன்றிற்கு சென்ற பெண் ஒருவரின் தலைமுடிகள் உதிர்ந்து விழும் அளவுக்கு கிரீம் வகைகளைப் பூசியதாகக் கூறப்படும் அந்நிலையத்தின் உரிமையாளர் உட்பட இருவரை கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு மினுவாங்கொடை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மினுவாங்கொடை பொரகொடவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

பாதிக்கப்பட்ட பெண் திருமண நிகழ்வொன்றிற்குச் செல்வதற்காகத் தனது தலை முடியை அழகுபடுத்துவதற்குக் கடந்த 30 ஆம் திகதி மினுவாங்கொடை நகரத்தில் உள்ள அழகுகலை நிலையம் ஒன்றிற்கு சென்றுள்ளார்.

இதன்போது, குறித்த அழகு கலை நிலையத்தின் பணியாளர்கள் இந்த பெண்ணின் தலைமுடியில் கிரீம் வகைகளை பூசியுள்ளனர்.

இந்த பெண்ணின் தலைமுடிகள் திடீரென உதிர்ந்து விழுந்துள்ளது.

இதனையடுத்து, பாதிக்கப்பட்ட பெண் இது தொடர்பில் மினுவாங்கொடை பொலிஸ் நிலையத்தின் சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்தில் முறைப்பாடு அளித்துள்ளார்.

பின்னர், குறித்த அழகு கலை நிலையத்தின் உரிமையாளரும் இரண்டு பணியாளரும் பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இந்நிலையில், சந்தேக நபர்களைக் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு மினுவாங்கொடை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

(05)

காலைக்கதிர் Kalaikkathir

## இராணுவ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதிநிதித்துவப்படுத்தியே பொதுஜன பெரமுன நாடாளுமன்றத்துக்கு தெரிவானது. அந்த மக்களாணை இன்றும் இருக்குமாயின் இவ்வாறு இராணுவத்துக்கு எதிராக செயற்படுவதற்கு ஆளும் தரப்புக்குத் தார்மீக உரிமை கிடையாது என்றார்.

இதன்போது எழுந்து உரை யாற்றிய விமல் அணியின் உறுப்பினர் கெவிந்து குமாரது ங்க, இராணுவத்தினரை பலிக்கடா வாக்கும் வகையில்தான் இந்தச் சட்டமூலம் கொண்டு வரப்பட்டுள்ளது. மாகாண சபைத் தேர்தல் பற்றி தற்போது பேசப்படுகிறது. ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் மாகாண சபைத் தேர்தல் பற்றிப் பேசுவது அவசியமற்றது. உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சட்டமூலத்தின் பெரும்பாலான ஏற்பாடுகள் நாட்டின் சுயாதீனத்துக்கு முரணானவை என்றார்.

இதனைதொடர்ந்துஎழுந்துஉரையாற்றிய சபை முதல்வர் சுசில் பிரேமஜயந்த, இது ஒரு சட்டமூலம் மாத்திரமே. நீதிமன்றம் செல்வதற்கு அனைவருக்கும் உரிமை உண்டு. ஆகவே கலக்கமடைய வேண்டாம். புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்ததன் பின்னரே உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுசட்டமூலம்குறித்துஅடுத்தக்கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒப்புதல் கிடைக்கப் பெற்றுள்ளது.

இந்தச்சட்டமூலத்தைஅரசவர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் நாடாளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காகவும் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த ஒருங்கிணைந்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்றார்.

## நல்லடக்கம்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்டத்துக்கு அனுப்பிவைக்கப்பட்ட கண்காணிப்பாளர்களுக்கும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்று கடந்த வார இறுதியில் நடைபெற்றது. இச்சந்திப்பில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் அதன் திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் கணேசபிள்ளை குகன், மாவட்ட செயலாளர் கிருஷ்ணபிள்ளை ஸ்ரீபிரசாத், கட்சி செயற்பாட்டாளர் சிந்துஜன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

இச்சந்திப்பின்போது ஒற்றையாட்சி முறைமை நீக்கப்படல் வட கிழக்கு தமிழர் தாயகம் தமிழ்த்தேசமாக அங்கீகரிக் கப்படல் சுவிட்ஸர்லாந்து கியூபெக் போன்ற பிராந்தியங்களில் காணப்படும் சமஷ்டிஅரசியலமைப்புமுறைமைஅறிமுகப்ப டுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்படல் இனப்படுகொலை தொடர்பில் சர்வதேச விசாரணை முன்னெடுக்கப்படல் உள்ளிட்ட தமது நிலைப்பாடுகள் தொடர்பில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பிரதிநிதிகள் ஐரோப்பிய ஒன்றியத் தேர்தல் கண்காணிப்பாளர்களுக்கு விளக்கிக்கூறினர்.

அத்தோடு தமிழ் மக்களின் அரசியல் கோரிக்கைகளை ஏற்றுஇ ஒற்றையாட்சி முறைமைநீக்கப்படும்எனும்உத்தரவாதத்தை இம்முறைஜனாதிபதித்தேர்தலில்போட்டியிடும் பிரதான வேட்பாளர்கள் எவரும் தராத நிலையில் அத்தேர்தலைத் தமிழ் மக்கள புறக்கணிக்கவேண்டும் என்பதே தமது நிலைப்பாடு எனவும் அவர்கள் ஐரோப்பிய ஒன்றியத் தேர்தல் கண்காணிப்பாளர்களிடம் எடுத்துரைத்தனர்.







காலைக்கதிர் Kalaikkathir

# சட்டத்தின் ஆட்சியை பாதுகாக்காதவர் நாட்டை என்றும் முன்னேற்றமுடியாது

## ஜனாதிபதி வேட்பாளர் விஜயதாச ராஜபக்ஷ கூறுகிறார்



சட்டத்தின் ஆட்சி இல்லாத எந்த நாடும் முன்னேறுவதில்லை. சிங்கப்பூர் முன்னேற்றமடைய பிரதான காரணம் அங்கு சட்டத்தின் ஆட்சி பாதுகாக்கப்பட்டுவருவதாகும். நாடாளுமன்றத்துக்கு மோசடி காரர்கள் தெரிவுசெய்யப்படுவதற்கு தேர்தல் முறைமையே காரணமாகும் என ஜனாதிபதி வேட்பாளர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஜனாதிபதி வேட்பாளர்கள் தங்களின் கொள்கை பிரகடனத்தை மக்களுக்கு தெரிவிப்பதற்கு அரசாங்க தகவல் திணைக்களம் அவர்களுக்கு வழங்கி இருக்கும் விசேட சந்தர்ப்பத்தில் திங்கட்கிழமை கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

நாட்டின் தற்போதைய விகிதாசார தேர்தல் முறை மற்றும் நிறைவேற்று ஜனாதிபதி முறையை இல்லாமல் செய்வதாக 1994ஆம் ஆண்டு முதல் அதிகாரத்துக்கு வந்த ஜனாதிபதிகள் வாக்குறுதி அளித்து வந்தனர். ஆனால் அதனை இதுவரை யாருக்கும் செய்ய முடியவில்லை. இந்த தேர்தலிலும் ஒருசில ஜனாதிபதி வேட்பாளர்கள் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை இல்லாமல் செய்வதாக வாக்குறுதி அளித்து வருகின்றனர்.

அதேபோன்று விகிதாசார தேர்தல் முறையில் இருக்கும் மோசடி காரணமாகவே மோசடி காரர்கள் அதிகமாக நாடாளுமன்றத்துக்கு தெரிவுசெய்யப்படுகின்றனர். அதனால் இந்த தேர்தல் முறையில் மாற்றம் செய்வதன் மூலமே மோசடிகளை கட்டுப்படுத்த முடியும்.

இருந்தபோது தற்போது நாங்கள் தேர்தல் செலவு கண்காணிப்பு சட்டத்தை நாடாளுமன்றததில் அனுமதித்துக்கொண்டுளோம். இந்த சட்டம் ஜனாதிபதி தேர்தலில் அமுலில் உள்ளது. அதனால் ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு ஓரளவு நியாயம் கிடைக்கிறது.

வேட்பாளர்கள் தேர்தலுக்காக தங்களுக்கு முடியுமான வகையில் செலவிட முடியாது. அதற்கு வரையறை செய்யப்பட்டிருக்கிறது. அதேபோன்று வேட்பாளர்களின் சொத்து விவரங்களும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இந்த விடயங்களில் வேட்பாளர்கள் பொய்யான தகவல் வழங்கி இருந்தால், அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் இந்த சட்டத்தில் ஏற்பாடுகள் இருக்கின்றன.

அதனால் வேட்டபாளர் ஒருவர் கண்மூடித்தனமாக செலவழித்து, அதன் வருமான முறைகளை தெரிவிக்க தவறினால் அல்லது பொய் தகவல்களை வழங்கினால், தேர்தலுக்கு பின்னர் குறித்த வேட்பாளர் வெற்றிபெற்றால், அவரின் பதவி இல்லாமல் போவதற்கும் வாய்ப்பு இருக்கிறது. அதேபோன்று தோல்வியடைந்த வேட்பாளர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்க முடியும்.

மேலும் எந்தவொரு நாடும் பாரிய முன்னேற்றம் இல்லாவிட்டாலும் அந்த நாட்டில் சட்டத்தின் ஆட்சி பாதுகாக்கப்படுமாக இருந்தால் அந்த நாடு முன்னேற்றமடையும். சிங்கப்பூர் பாரிய வளர்ச்சியடைந்த நாடாக இருக்கவில்லை. ஆனால் அங்கு சட்டத்தின் ஆட்சி பாதுகாக்கப்பட்டுவருவதால், அந்த நாடு முன்னேற்றமடைந்துள்ளது. சாதாரண மக்கள் முதல் ஆட்சியாளர்கள் வரை அனைவருக்கும் சட்டம் ஒரே மாதிரி இருக்க வேண்டும்.

அதேபோன்று எமது நாட்டில் பரீட்சை முறையில் மாற்றம் செய்யப்பட வேண்டும். வாய்ப்பாடு செய்து பரீட்சை எழுதும் முறையே இன்றும் இருக்கிறது. இந்த முறை தற்போது காலாவதியாகியுள்ளது.பிரித்தானியாவே இந்த முறையை அறிமுகப்படுத்தியது. ஆனால் அங்கு இந்த முறை இரத்துச்செய்யப்பட்டுள்ளது.

மேலும் எந்த நாட்டுடனும் கொள்கை அடிப்படையிலே கொடுக்கல்வாங்கல்கள் மேற்கொள்ள வேண்டும். அதனை மீறி செயற்பட்டால், நாட்டின் எதிர்காலம் என்னவாகும் என யாருக்கும் தெரிவிக்க முடியாது. நாங்கள் எப்போதும் அணிசேரா கொள்கையுடன் செயற்படுவதன் மூலமே எமது இறைமையை பாதுகாத்துக்கொள்ள முடியும். - என்றார்.(05)



காலைக்கதிர்
Kalaikkathir

# நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு முன்பாகக் கவனவீர்ப்புப் போராட்டம்.








நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையின் வைத்தியர்கள் நேற்று (செவ்வாய்க்கிழமை) கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வைத்தியசாலை பிரதான நுழைவாயில் முன்பாக பல்வேறு பதாதைகளை ஏந்தியவாறும், கோசங்களை எழுப்பியவாறும் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுப்பட்டனர்.

இந்த விடயம் தொடர்பில் ஊடகவியலாளர் சந்திப்பு நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலை காரியாலயத்தில் கேட்ப்போர் கூட மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன் போது கருத்து தெரிவித்த அரசவைத்திய அதிகாரிகள் சங்க நுவரெலியா கிளையின் வைத்தியர்கள் கூறுகையில் –

நமது நாட்டிலிருந்து விசேட வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளிநாடுகளுக்கு வெளியேறியுள்ளதாக விசேட வைத்தியர்களின் சங்கம் தெரிவித்துள்ளனர்.

இதற்கு பிரதான காரணம் தற்போதைய அரசாங்கமே இதுவரை வைத்தியர்கள் எதிர் நோக்கும் பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டபோதிலும்ஒன்றுமேநிறைவேற்றப்படவில்லை.

அத்துடன் அத்தியாவசிய மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் உடனடியாக மக்களுக்கு கிடைக்க வழி செய்ய வேண்டும் .

எவ்வித முன்னறிவிப்பும் இன்றி முறையற்ற வைத்தியர்களின் இடமாற்றம் வழங்குவதை நிறுத்த வேண்டும்.

வாழ்வாதாரத்துக்கு ஏற்ற ஊதியங்களை அதிகரிக்க வேண்டும். வைத்தியசாலையில் நிலவும் ஊழியர் பற்றாக்குறையை உடன் நிவர்த்தி செய்ய வேண்டும்.

குறிப்பாக காதாரத் துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் குறித்து மக்களுக்கு உண்மையை வெளிப்படுத்தும் தொழிற்சங்கத் தலைவர்களை ஒடுக்கும் நோக்கில் அமுல்படுத்தப்படும் ஒழுக்காற்று விசாரணைகள் மற்றும் ஏனைய நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும்.

இவ்வாறு ஏராளமான பிரச்சினைகள் உள்ளது கூறிக்கொண்டே போகலாம் எனினும் இனி வரும் நாட்களில் சரி தாம் முன்வைத்த கோரிக்கைகளுக்கு சுகாதார அமைச்சினால் எந்தவொரு தீர்வும் கிடைக்காவிட்டால் நாடு பூராகவும் உள்ள வைத்தியசாலையில் அனைத்து சேவைகளையும் நிறுத்தி பணிப்புறக்ணிப்பு போராட்டத்தில் குதிப்போம். – என்றனர். (05)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.09.2024இல் வெளியிடப்பெற்றது